**14.03.2024**

**அ.வ.எண். 185/2018**

**நீ.ம.சா.1 ராஜலட்சுமி அவர்களின் வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1. நீ.ம.சா.ஆ 4 ல் உள்ள முதல் ஆவணம் சர்வே எண் 252 ன் புலவரைபடம் என்றால் சரிதான். நீ.ம.சா.ஆ 4 ல் கடைசி ஆவணம் டவுன் சர்வே எண் 42, 52, 53, மற்றும் 39 ன் புலவரைபடம் என்றால் சரிதான். பழைய சர்வே எண் 252/3 சி க்கு புதிய சர்வே எண் 42 என்றால் சரிதான். பழைய சர்வே எண் 252/3 சி ன் கிழக்கு பக்கம் அளவும் புதிய சர்வே எண் 42 ன் கிழக்கு பக்கம் அளவும் 10.8 மீட்டர் என்றால் சரிதான்.

2. மேற்படி இரண்டு புல எண்களுக்கும் ஆவணப்படி தாவா சர்வே எண்ணில் கிழக்கு பக்க அளவில் மாற்றம் எதுவும் இல்லை என்றால் சரிதான். தாவா சர்வே எண் 252/3 சி ன் பழைய புலவரைபடத்தில் மேற்கு பக்க அளவு 10.8 மீட்டர் என்றும் அதற்கு புதிய டவுன் சர்வே எண் 42 ன் புதிய வரைபடத்தில் 10.4 மீட்டர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். புதிய டவுன் சர்வே வரைபடம் ஆவணப்படியும் அனுபவத்தின்படியும் தயார் செய்யப்பட்டது.

3. புதிய டவுன் சர்வே வரைபடம் 1999 - 2000 வருடம் தயார் செய்யப்பட்டது. டவுன் சர்வே எண் 39ல் மூன்று உட்பிரிவுகள் உள்ளது. டவுன் சர்வே எண் 39 ஆனது 39/1 மற்றும் 39/2 ஆக 2011ம் வருடமும் 39/3 ஆக 2019ம் வருடமும் உட்பிரிவு செய்யப்பட்டது. சர்வே எண் 39/2 பரமசிவம் மனைவி கற்பகம் பெயரில் உட்பிரிவு செய்யப்பட்டது. 2011 மற்றும் 2019ம் வருடத்தில் சர்வே எண் 39ல் உட்பிரிவு செய்யப்பட்ட பிறகு அதில் வேறெந்த திருத்தமும் செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

4. புதிய டவுன் சர்வே எண் 39ல் கிழக்கு பக்க அளவு 9.0 மீட்டர். 2011 மற்றும் 2019 வருடத்திற்கு பிறகு டவுன் சர்வே எண் 39ன் அளவுகள் குறைவாக உள்ளது என்று எங்கள் அலுவலகத்திற்கு ஆட்சேபனை கடிதம் எதேனும் வந்ததா என்றால் இல்லை. தாவா சர்வே எண் 252/3சி ன் மேற்கு பக்க அளவுகள புதிய டவுன் சர்வே வரைபடத்தில் 0.4 மீட்டர் குறைவாக உள்ளது என்றால் சரிதான். எனவே பழைய வரைபடத்தினையும் புதிய வரைபடத்தினையும் ஒப்பிட்டு பார்க்கும்போது தாவா சர்வே எண்ணில் மேற்கு பக்க அளவுகள் குறைவாக உள்ளதே தவிர கூடுதலாக விஸ்தீரணம்

சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான்.

5. பழைய சர்வே எண் 252/3பி ல் மேற்கு பக்க அளவு 9.6 மீட்டர் என்றால் சரிதான். அதின் புதிய டவுன் சர்வே எண் 39ன் மேற்கு பக்க அளவு 10 மீட்டர். எனவே பழைய வரைபடம் மற்றும் புதிய வரைபடத்தினையும் ஒப்பிட்டு பார்க்கும்போது புதிய டவுன் சர்வே எண் 39ல் மேற்கு பக்க அளவு மட்டும் 0.4 மீட்டர் புதிய வரைபடத்தில் அதிகமாக உள்ளது என்றால் சரிதான்.

6. பழைய வரைபடத்தில் பழைய சர்வே எண் 252/3பி ன் கிழக்கு மற்றும் மேற்கு பக்க அளவுகள் 18.8 மீட்டர் மற்றும் புதிய வரைபடத்தில் புதிய டவுன் சர்வே எண் 39ல் கிழக்கு மற்றும் மேற்கு பக்க அளவுகள் 19 மீட்டர். தற்போது டவுன் சர்வே வரைபடம்தான் நடைமுறையில் உள்ளது என்றால் சரிதான்.